**IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,**

**TENKASI.**

**Date : 04.09.2025**

**OS No. : 34/2021**

**Pw : 1**

**Name : திரு. பாலமுருகன்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் கிரஷர் மற்றும் செங்கமால் நடத்திவருகிறேன். எனக்கு மாதவருமானம் தோராயமாக எவ்வளவு என்று சொல்லமுடியாது. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். 2020 ம் வருடத்தில் நான் வருமான வரி கணக்கு அறிக்கைகை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியாது. பிரதிவாதியை எனக்கு சுமார் 10 வருடங்களாக தெரியும். அவர் தற்போது டிரைவராக பணிபுரிந்துவருகிறார், இதற்கு முன்னர் கருத்தலிங்கபுரத்தில் செங்கமால் நடத்திவந்தார். எத்தனை வருடங்களாக செங்கமால் நடத்திவந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பிரதிவாதி செங்கமால் நடத்திவந்ததில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு சொந்த ஊர் செட்டியூர் என்றால் சரிதான். பிரதிவாதி கட்டேறிப்பட்டியில் வசித்துவருகிறார் என்றால் சரிதான். அவருடைய குடும்பம் மற்றும் சொத்து விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. அவருடைய வசதி, வாய்ப்பு பற்றியும் எனக்கு தெரியாது.

பிரதிவாதி என்னிடம் 15.08.2020 க்கு ஒரு மாதத்திற்கு முன்னர் இருந்தே என்னிடம் பணம் கேட்டுவந்தார். 15.08.2020 ம் தேதி நான் அவரிடம் பத்து லட்ச ரூபாய் பணத்தை கொடுத்தேன். பணத்தை ரொக்கமாகத்தான் கொடுத்தேன். பொதுவாக, பத்து லட்ச ரூபாய் அளவில் பெரிய தொகையை கடனாக கொடுக்கும்போது அடமானம் எழுதி வாங்கிக்கொள்வார்கள் என்றும், புரோநோட் அடிப்படையில் கடன் கொடுப்பது வழக்கம் கிடையாது என்றும் சொன்னால் பழக்கத்தின் அடிப்படையில் நான் வேறு அடமானம் எதுவும் எழுதி வாங்கவில்லை. நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தபோது, அவருக்கு அதை

திரும்ப செலுத்தும் சக்தி உள்ளதா என்பதை விசாரித்து அதன் பின்னர் கடன் கொடுத்தேனா என்றால் அவருக்கு இடம் இருக்கிறது என்று எனக்கு தெரியும், அதனால் கடன்கொடுத்தேன். 2020 ல் நான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்தபோது அவர் டிரைவராக இருந்தார் என்றால் சரிதான். அந்த காலக்கட்டத்தில் டிரைவருக்கு ரூ.15,000/-க்கு மேல் மாத வருமானம் கிடையாது என்றால் அவர் ரூ.40,000/- வருமானம் ஈட்டிவந்தார். பிரதிவாதி சொல்லிதான் அவர் ரூ.40,000/- வருமானம் ஈட்டிவந்த விவரம் எனக்கு தெரியும். பத்து லட்ச ரூபாய் பணத்தை நான் வங்கியிலிருந்து எடுத்துவந்தேனா அல்லது என் கையிருப்பில் இருந்த பணத்தை பிரதிவாதிக்கு கொடுத்தேனா என்றால் என் கையிருப்பில் இருந்ததைத்தான் கொடுத்தேன். நான் ஆரம்பத்தில் டிரைவராக பணிபுரிந்துவந்தேன் என்றால் சரிதான். எனக்கு பத்து லட்ச ரூபாய் கடன் கொடுக்கும் அளவிற்கு வசதி கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

15.08.2020 க்கு பின்னர், பிரதிவாதியுடன் எனக்கு வேறு வரவு செலவு கிடையாது என்றால் சரிதான். புரோநோட்டை செட்டியூரில் உள்ள எனது வீட்டில் வைத்து எழுதினோம். அப்துல்ரஹீம் என்பவர் தாவா புரோநோட்டை எழுதினார். அவர் தென்காசியை சேர்ந்தவர். அப்துல்ரஹீம் என்ன காரணத்திற்காக எங்கள் ஊருக்கு வந்திருந்தார் என்றால் அவர் தனது சொந்தவேலையாக வந்திருந்தார், அவரிடம் புரோநோட்டை கொடுத்து எழுதசொன்னேன். செட்டியூருக்கும் தென்காசிக்கும் இடையே சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும். அப்துல்ரஹீம் ஒரு சாட்சியாகவும், முருகன் என்பவர் மற்றொரு சாட்சியாகவும் தாவா புரோநோட்டில் கையொப்பமிட்டார்கள். முருகனுக்கு சொந்த ஊர் சாம்பவர்வடகரையாகும். செட்டியூருக்கும் சாம்பவர்வடகரைக்கும் இடையே சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். அவர் எப்போதும் என்னுடன் இருப்பார், அதனால் அவர் புரோநோட்டில் கையொப்பமிட்டார். முருகனுக்கும் எனக்கும் இடையே கொடுக்கல், வாங்கல் உண்டு என்றால் சரிதான்.

எங்கள் வீட்டின் ஹாலில் வைத்து புரோநோட் எழுதப்பட்டது. நான், பிரதிவாதி மற்றும் 2 சாட்சிகள் ஆகியோர் மட்டும் அங்கு இருந்தோம். ஹாலில் உள்ள டேபிளில் வைத்து அப்துல்ரஹீம் புரோநோட்டை எழுதினார். எத்தனை மணிக்கு புரோநோட் எழுதப்பட்டது என்றால் மதியம் எழுதப்பட்டது, குறிப்பாக நேரம் நியாபகமில்லை. புரோநோட்டை எழுதி முடிக்க அரை மணி நேரம் ஆனது. புரோநோட்டை எழுத அப்துல்ரஹீமுக்கு வாசகங்களை நானும் பிரதிவாயும் சொன்னோம். முதலில் யார் அப்துல்ரஹீமிடம் முகவரியை சொன்னது

என்றால் அது எனக்கு நியாபகமில்லை. எந்த வகையான பேனாவில் புரோநோட் எழுதப்பட்டது என்பது எனக்கு நியாபகமில்லை. சாட்சிகள் அதே பேனாவில் கையொப்பமிட்டார்களா அல்லது வேறு பேனாவை வைத்து கையொப்பமிட்டார்களா என்பது எனக்கு நியாபகமில்லை. அச்சிடப்பட்ட புரோநோட்டை ஸ்டாம்ப் ஒட்டி பிரதிவாதி கொண்டுவந்திருந்தார், அதில் விவரங்களை மட்டும் அப்துல்ரஹீம் நிரப்பினார். முதலில் யார் சாட்சி கையொப்பம் போட்டார் என்பது எனக்கு நியாபகமில்லை. பிரதிவாதி புரோநோட்டில் கையொப்பமிட்ட பின்னர்தான் சாட்சிகள் கையொப்பமிட்டார்கள். அந்த சமயத்திலேயே பணத்தை பிரதிவாதியிடம் நான் கொடுத்துவிட்டேன். இருபது 500 ரூபாய் நோட்டு கட்டுக்களை கொடுத்தேன். ஒரு துணிப்பையில் பிரதிவாதி அந்த பணத்தை போட்டு எடுத்து சென்றுவிட்டார்.

பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் காலம், கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான். அப்போது லாக்டவுண் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை. பிரதிவாதி தன்னுடன் யாரையும் அழைத்து வரவில்லை. அவர் மட்டுமே இருசக்கர வாகனத்தில் என் வீட்டிற்கு வந்தார். வீட்டு செலவிற்கும், கிணறு வெட்ட, போர் போட பணம் தேவைப்படுகிறது என்று என்னிடம் கடன் கேட்டார். ஆனால் புரோநோட்டில் தொழில் நிமித்தமாக பணம் தேவைப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் டிரைவர் தொழிலை தவிர்த்துவேறு தொழில் செய்யவில்லை என்றால் சரிதான்.

தென்காசி காவல்நிலையத்தில் காவலராக பணிபுரியும் அருள் என்பவர் எனக்கு பழக்கமா என்றால் பழக்கம்தான். கருத்தலிங்கபுரம் ஊருக்கு கீழ்ப்புறம் பிரதிவாதிக்கு 3 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் செங்கமால் வைத்துக்கொள்ள நான் பிரதிவாதியிடம் 2020 ஜனவரியில் அந்த இடத்தை கேட்டேன் என்றால் சரியல்ல. அந்த இடத்தில் செங்கமால் நடத்துவதற்கு பிரதிவாதியிடம் வாய்மொழியாக ஒப்பந்தம் போட்டுவிட்டு அந்த இடத்திலிருந்து மணலை கடத்திவிற்றேன் என்றால் சரியல்ல. அந்த மணல் கடத்தல் சம்பந்தமாக, என் மீதும் எனக்கு உடந்தையாக இருந்த காவலர் அருள் மீதும் பிரதிவாதி கடையம் காவல்நிலையத்தில் 06.01.2021ம் தேதி ஒரு புகார் மனு கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதியிடம் கொடுத்த பணத்தை திரும்ப கேட்டு, அதில் பிரச்சனை ஏற்பட்டு அதன் காரணமாக அவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். காவலர் அருள் என்பவருக்கு சொந்த ஊர் மயிலப்பபுரம் ஆகும். என் மீதும் காவலர் அருள் மீதும் பிரதிவாதி கடையம் காவல்நிலையத்தில் 06.01.2021ம் தேதி ஒரு புகார் கொடுத்த

காரணத்தினால் போலியான ஆவணங்களை உற்பத்தி செய்து, 11.01.2021ம் தேதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா புரோநோட்டில் உள்ள கையொப்பம், பிரதிவாதியுடையதுதானா என்பதை கண்டறிய கையெழுத்து நிபுணரின் ஆய்விற்க்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். கையெழுத்து நிபுணரின் அறிக்கையில், தாவா புரோநோட்டில் உள்ளது பிரதிவாதி நீலமேகக்கண்ணனின் கையொப்பம் கிடையாது என அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் போலியான ஆவணங்களை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிப்பது தண்டணைக்குரிய குற்றம் என்றால் சரிதான். என் மீது கடையம் காவல்நிலையத்தில் பல்வேறு வழக்குகள் உள்ளன என்றால் ஒருசில வழக்குகள் உள்ளன.

என் மீதும் காவலர் அருள் மீதும் பிரதிவாதி கடையம் காவல்நிலையத்தில் 06.01.2021ம் தேதி ஒரு புகார் கொடுத்துள்ளதாலும், காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததாலும் பிரதிவாதியை பழி வாங்கவேண்டும் என்பதற்காக தாவா புரோநோட்டில் பிரதிவாதியின் கையெழுத்தை போலியாக போட்டு அதன் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காவலர் அருள் மற்றும் பிற சாட்சிகளான அப்துல் ரஹீம், முருகன் ஆகியோருடன் நான் கூட்டு சதி செய்து தாவா புரோநோட்டை உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் ஏற்கெனவே இந்நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளித்த அப்துல் ரஹீம் தற்போது மீண்டும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க மறுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS. No. 34/2021**

| | | | |
|---|---|---|---|
| Name | : | **திரு. முருகன்** | **Pw2** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of September 2025.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொன்னவை தான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அது **வா.சா.ஆ. 9** ஆகும்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க என்னை வாதி பாலமுருகன்தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் வீரசிகாமணியில் கடை வைத்து வியாபாரம் செய்கிறேன். வாதி பாலமுருகனை எனக்கு 2014 ல் இருந்து தெரியும். வாதியுடன் எனக்கு கொடுக்கல் வாங்கல்

உண்டு, மேலும் அவர் எனது நண்பரின் நண்பர் ஆவார். நான் எப்போதும் வாதியுடன் இருப்பேன் என்றால் சரியல்ல, என்றாவது ஒருநாள் அவரை சந்திப்பேன். புரோநோட்டு வாதியின் வீட்டில்வைத்து எழுதப்பட்டது. வாதி வீட்டு ஹாலில் உள்ள டேபிளில்வைத்து எழுதப்பட்டது. புரோநோட்டை அப்துல்ரஹீம் என்பவர் எழுதினார். புரோநோட்டை எழுதும்போது வாதி, பிரதிவாதி ஆகியோருடன் நானும், அப்துல்ரஹீமும் இருந்தோம். புரோநோட்டை எழுத அப்துல்ரஹீமிற்கு விவரம் சொன்னது யார் என்று எனக்கு நியாபகமில்லை. புரோநோட்டு 15.08.2020 ம் தேதி பகல் நேரத்தில் எழுதப்பட்டது, நேரம் எனக்கு நியாபகமில்லை. புரோநோட்டை எழுதி முடிக்க ஒருமணி நேரம் ஆனது. புரோநோட் எழுதுவதற்கு யார் பேனா கொடுத்தார்கள், என்ன வகையான பேனாவால் எழுதப்பட்டது என்பது எனக்கு நினைவில்லை. நான் யாருடைய பேனாவால் கையொப்பம் போட்டேன் என்பது எனக்கு நினைவில்லை. புரோநோட்டை பிரதிவாதி கொண்டுவந்திருந்தார்.

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை நான் சொல்லித்தான் வழக்கறிஞர் தயார் செய்தார். பிரதிவாதியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 2015 க்கு பின்னர் தெரியும். பிரதிவாதி என்ன தொழில் செய்தார் என்றால் டிரைவர் வேலை பார்க்கிறார். பிரதிவாதியை என்னால் இந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்ட முடியுமா என்றால் அடையாளம் காட்ட முடியும். இன்று தான் வாதி என்னிடம் பிரதிவாதி யார் என்பதையே அடையாளம் காட்டினார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எந்த ஊர் என்றால் கட்டேறிப்பட்டி. புரோநோட்டை எழுதிய அன்று பிரதிவாதியுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் இல்லை. அவர் இருசக்கர வாகனத்தில் வந்தார்.

வாதி, பிரதிவாதியிடம் 500 ரூபாய் நோட்டு கட்டுகளாக கொடுத்தார். பிரதிவாதி ஒரு துணிப்பையில் அந்த பணத்தை எடுத்துச்சென்றார். துணிப்பையை பிரதிவாதிதான் கொண்டுவந்திருந்தார். புரோநோட் எழுதப்பட்ட காலம், கொரோனா காலக்கட்டம் என்றால் சரிதான். அப்போது போக்குவரத்து கெடுபிடி இருந்ததுஎன்று சொன்னால் அந்த காலக்கட்டத்தில் அவ்வாறு இல்லை. புரோநோட்டில் சாட்சி கையொப்பம் போட வேண்டும் என்று வாதி என்னை அழைத்திருந்தார். அதனால் நான் சாம்பவர்வடகரையில் இருந்து செட்டியூருக்கு சென்றேன். சாம்பவர்வடகரையில் இருந்து செட்டியூருக்கு சுமார் 35 கி.மீ தூரம் இருக்கும். பிரதிவாதிக்கு சுமார் 40 வயது இருக்கும். போலியான ஆவணங்களை உற்பத்தி செய்வது மற்றும் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிப்பது தண்டனைக்குரிய

குற்றம் என்றால் சரிதான். நான் சொன்னதுபோல், சொன்ன நாளில் பிரதிவாதி வாதியிடம் கடன் பெறவில்லை என்றும், பிரதிவாதி புரோநோட்டில் கையொப்பமிடவில்லை என்றும், வாதியும் நானும் போலியாக தயார் செய்த புரோநோட்டை வைத்து தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதிக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வாதியிடம் ஏற்கெனவே கடன் வாங்கியிருந்த காரணத்தினால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**